## பெட்ரோல், டீசல், சி.என்.ஜி. விலை உயர்வு!

# மக்கள் மீதான சுமையைக் குறைக்க நடவடிக்கை எடுப்பீர்!

## எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தல்!



**சென்னை, மே 17-**

**பெட்ரோல், டீசல், சி.என்.ஜி. விலையை உயர்த்திய ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துக் கொண்டுள்ளார்.**

**இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மக்கள் மீதான இந்தச் சுமையை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி உள்ளார்.**

**இது தொடர்பான அறிக்கையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளதாவது:**



ஏழை - எளிய - நடுத்தர வர்க்க மக்களைப் பாதிப்புக்கு உள்ளாக்கும் வகையில் Petrol, Diesel, CNG விலையை ஒன்றிய அரசு உயர்த்தி இருப்பதை வன்மையாக கண்டிக்கிறோம்.

இந்த விலை ஏற்றத்தின் மூலம் நாட்டு மக்களின் வாழ்வாதாரத்தை கேள்விக்குறியாக்கிவிட்டு, 'பொறுத்துக்கொள்ளுங்கள், அதைச் செய்யாதீர்கள், இதைச் செய்யாதீர்கள்' என்று ஒன்றிய அரசு அறிவுரை கூறுவது, தனது தோல்வியை மறைக்கும் முயற்சியே ஆகும்.

மக்கள் மீது ஏற்றப்பட்டுள்ள இந்த சுமையை குறைக்க உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.





திருவெறும்பூர் தொகுதியில் கழக வேட்பாளராகப் போட்டியிட்ட திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தேர்தலில் தனக்கு வாக்களித்த மற்றும் வாக்களிக்காத திருவெறும்பூர் தொகுதி வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார். இந்நிகழ்வில் திருச்சி மாநகரக் கழகச் செயலாளர் மு. மதிவாணன், பகுதி கழகச் செயலாளர்கள் தர்மராஜ், நீலமேகம், விஜயகுமார், சிவக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் எனப் பெருந்திரளானோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## கடும் எதிர்ப்புகளுக்குப் பணிந்தது த.வெ.க. அரசு!

# கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, மகளிரின் வங்கிக்கணக்கில் வரவு வைப்பு!

**சென்னை, மே 17 -**

**கடும் எதிர்ப்புகளுக்குப் பணிந்து, கலைஞர் மகளிர் உரிமைத் தொகையை மகளிரின் வங்கிக் கணக்கில் த.வெ.க. அரசு வரவு வைத்துள்ளது.**

திராவிட மாடல் ஆட்சியில் ஒரு கோடியே 31 லட்சம் மகளிருக்கு கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்கப்பட்டு வந்த நிலையில், த.வெ.க. அரசு அமைந்தபிறகு, கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம் மறுசீரமைப்பு செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதற்கு தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்தார்.

மாதம் 2 ஆயிரத்து 500 ரூபாய் தருவதாக கூறிவிட்டு, ஆயிரம் ரூபாய கூட தராமல் இழுத்தடிக்கிறதுதான் உங்க மாற்றமா? என்றும் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேள்வி எழுப்பி யிருந்தார்.

இதனிடையே, தி.மு.க. தலைவர் உள்ளிட்ட பல்வேறு கட்சித் தலைவர்களின் எதிர்ப்புகளுக்கு பணிந்து, கலைஞர் மகளிர் உரிமைத்தொகை ஆயிரம் ரூபாயை, பயனாளர்களின் வங்கிக்கணக்குகளில் த.வெ.க. அரசு வரவு வைத்துள்ளது.

இதன்மூலம் மறுசீரமைப்பு என்ற பெயரில் மகளிர் உரிமைத் திட்டத்தை காலம்தாழ்த்த நினைத்த த.வெ.க. அரசு, தனது முடிவில் இருந்து பின்வாங்கி யுள்ளது குறிப்பிடத்தக்கது.

## தஞ்சை வரும் கழகத் தலைவருக்கு

# திருவாரூர் மாவட்டக் கழகத்தினர் சிறப்பான வரவேற்பு!

திருவாரூர், மே.17-

திருவாரூர் மாவட்ட கழக முன்னாள் செயலாளர் மறைந்த பூண்டி கலைச்செல்வன் அவர்களின் இல்ல திருமண விழாவிற்கு வருகை தரும் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், கழக இளைஞர் அணியின் செயலாளர் சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், தலைமை கழக நிர்வாகிகளுக்கும் திருவாரூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்ட கழகத்தின் சார்பில் தஞ்சாவூரில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

கழக தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் "மீண்டு வருவோம் மீண்டும் வருவோம்" என்கிற சூளுரையோடு சட்டமன்ற தேர்தலுக்குப்பின், முதன்முறையாக தஞ்சை மாநகருக்கு, திருவாரூர் மாவட்ட செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ. அவர்களுடைய சகோதரரும் கொரடாச்சேரி பேரூர் கழகத்தினுடைய செயலாளர் பூண்டி.கே. கலைவேந்தன் அவர்களுடைய தந்தையாரும், கழக செயல் மறவருமான மறைந்த பூண்டி கே. கலைச்செல்வம் அவர்களுடைய மகள் கலை அழகிராம் பாலாஜியோடு கரம் கோர்க்கும் திருமண நிகழ்வுக்கு தலைமை ஏற்க வருகை தரவுள்ளார்கள்.

நாளை (18.05.2026 - திங்கள்) காலை 9.00 மணிக்கு, திராவிட நாயகர் கழக தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுடைய சீரிய தலைமையில் தஞ்சாவூர் மகாராஜா மஹாலில் நடைபெற உள்ள இந்த திருமண விழாவிற்கு கழக இளைஞர் அணி செயலாளர் , சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும், பொதுச் செயலாளர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, முதன்மை செயலாளர் கே.என். நேரு, கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்பி. மற்றும் தலைமைக் கழக நிர்வாகி கள் முன்னிலை ஏற்க இருக்கின்றனர்.

திருமண விழாவில் பங்கேற்க வருகை தரும் கழகத் தலைவர் திராவிட நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், கழகத்தினுடைய இளைஞர் அணி செயலாளர் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், தலைமை கழக நிர்வாகி களுக்கும் திருவாரூர், தஞ்சாவூர், உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகளும் கழகத் தோழர்களும் திரண்டு வந்து மாபெரும் வரவேற்பு அளிக்கின்றனர்.

## அ.தி.மு.க. ஆட்சியில் போடப்பட்ட பொய் வழக்கு:

# முன்னாள் தி.மு.க. எம்.எல்.ஏ. நா.கார்த்திக், கோவை நீதிமன்றத்தில் ஆஜர்!

கோவை, மே 17-

அதிமுக ஆட்சியில் கடந்த 2018ம் ஆண்டு சூலூர் கண் ணம்பாளையத்தில் குட்கா தயாரிப்பு ஆலை செயல்பட்டு வந்தது. இதனை கண்டித்து திமுக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. இதைத்தொடர்ந்து அப்போதைய சிங்காநல்லூர் தொகுதி திமுக எம்.எல்.ஏ. நா.கார்த்திக் உட்பட சிலர் மீது அதிமுக அரசு பொய் வழக்கு போட்டது. இது தொடர்பான வழக்கு விசாரணை கோவை ஜே.எம்.1 நீதிமன்றத்தில் நடை பெற்று வருகிறது. இந்த வழக்கு விசாரணைக்காக திமுக மாநில தீர்மான குழு செயலாளரும், முன்னாள் எம்எல்ஏ வுமான நா.கார்த்திக் ஆஜர் ஆனார்.

அப்போது பள்ளபாளையம் பேரூராட்சி தலைவர் செல்வராஜ், தெற்கு மாவட்ட பிரதிநிதி மாதப்பூர் தங்கராஜ், ராவத்தூர் செல்வராஜ், பாப்பம்பட்டி பரமசிவம், மாநகர் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் அன்பு செழியன், வழக்கறி ஞர்கள் மதிவாணன், ராஜ மாணிக்கம், ஹேமந்த்குமார், குணசேகரன், ராஜன் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.




சேலம் கோட்டை மைதானத்தில் நீட் தேர்வை ரத்து செய்யக் கோரி நடைபெற்ற ஆர்பாட்டத்தில் சேலம் மத்திய மாவட்ட செயலாளர் இரா இராஜேந்திரன் கலந்து கொண்டு பேசினார் மற்றும் மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் ! பெரம்பூர் த. ஆறுமுகம் தலைமையில்

# அம்பத்தூர் பணிமனை தொ.மு.ச. நிர்வாகிகள்- உறுப்பினர்கள் கூட்டம்!

## பிடிசி ஜி.செல்வராஜ் — எம்.பெருமாள் சிறப்புரை!

சென்னை மே: 17

அம்பத்தூர் பணிமனை தொ.மு.ச நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் ஜூன்3 2026 முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் விழாவை சங்கத்தின் சார்பாக சிறப்பாக கொண்டாடுவது குறித்து விவாதிக்கப்பட்டது.

14-05-26 வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு அம்பத்தூர் பணிமனை பேருந்து நிலையம் அருகில் உள்ள அரங்கத்தில் மாநகர போக்குவரத்து கழக ஊழியர் முன்னேற்ற சங்கம், பணிமனை கிளை நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டம் சங்கத்தின் பொதுச் செயலாளர் பெரம்பூர் த.ஆறுமுகம் தலைமையில், இணை பொதுச்செயலாளர் பி.உதயசங்கர், இணை செயலாளர் ஏ.சாரங்க பாணி,என். எம்.சேகர் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் கழக மாநில தொழிலாளர் அணி செயலாளர் பி. டி.சி.ஜி.செல்வராஜ் மாநகர் போக்குவரத்து கழக ஊழியர் முன்னேற்ற சங்க பொருளாளர் எம்.பெருமாள் ஆகியோர் கலந்துகொண்டு ஆலோசனை வழங்கினர்.

இதில் பொதுக்குழு உறுப்பினர்கள் என்.வேல் முருகன், டி.பி.குமார், எஸ் அலெக்ஸாண்டர், ஒய். அருள்பிரின்ஸ், மற்றும் சங்க உறுப்பினர்கள் எம். வேலுச்சாமி, கே.தீன தாயளன், பி.என்.திருமலை, எம்.முருகேசன், எஸ்.சுந்தரமூர்த்தி, எஸ்.சரவணன், எம்.ஏகாம்பரம், எஸ்.எழிலன்.எம்.ஆறுமுகம்,ஆர். எஸ்.ராமு,என்.டி.மணி, என்.எஸ்.ஞானசேகரன்,பி. கார்த்திகேயன், ஜே. சிவா,எஸ்.தினேஷ், ஆர். காத்தவராயன், எஸ். சாபஸ்டின், சுந்தர ராஜன்,பி.சுரேஷ், ஆர்.சசிகுமார்,கே.அப்பாய்ரெட்டி ,ஜி.பார்த்திபன், பி.பாக்கியராஜ்,எஸ்.அசோக் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்றனர்.



கோவை தெற்கு மாவட்டம், கருமத்தம்பட்டி பேரூராட்சியில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில் வால்பாறை நகர கழக செயலாளர், வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் குட்டி (ஏ) சுதாகர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதில் ஒன்றிய கழக செயலாளர்கள் மன்னவன் (சூலூர் தெற்கு), சிபி.கே. செந்தில்குமார் (சூலூர் வடக்கு), ரமேஷ் (சுல்தான்பேட்டை மேற்கு), கருமத்தம்பட்டி நகர செயலாளர் நிதியா மனோகரன், மோப்பிரிபாளையம் பேரூர் கழக செயலாளர் சசிகுமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர் ரகு துரைராஜ், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் சூலூர் பிரபு, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ஜெயலலிதா உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## கோவை மாநகர் மாவட்ட

# இளைஞர் அணி எஸ்.தினேஷ் குமாரின் தந்தை சி.செல்வராஜ் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



கோவை, மே 17

கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி பெரியகடை வீதி பகுதி அமைப்பாளர் எஸ்.தினேஷ் குமாரின் தந்தை சி.செல்வராஜ் அவர்கள் சாலை விபத்து ஏற்பட்டு மிகவும் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் (15.5.2026) நள்ளிரவு 1.30 மணியளவில் மறைவெய்தினார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

செய்தியறிந்ததும் கழக முன்னணியினர், தோழர்கள் திரளாகச் சென்று மறைந்த சி.செல்வராஜ் அவர்களின் உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.





கோவை வடக்கு சட்டமன்றத் தொகுதியில் கழக வேட்பாளராக போட்டியிட்ட கோவை மாநகர மாவட்ட கழக பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன் வடவள்ளி பகுதி, வேலாண்டிபாளையம் பகுதி, பாப்பனாய்கன் புதூர் பகுதியில் தொகுதி மக்களை சந்தித்து நன்றி தெரிவித்தார். இதில் மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள், பாக முகவர்கள் பலர் கலந்து கொண்டனர்.